கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2024ம் வருடம் செப்டம்பர் மாதம் 26ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.3/2023
இன்
அசல் வழக்கு எண்.320/2022
* * * *

1. கோவிந்தசாமி
2. பாலகிருஷ்ணன் ... 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகள்

/எதிர்/

1. S.சுரேஷ் கண்ணன்
2. சந்திரா
3. சாந்தா
4. மகாலெட்சுமி
5. தேவிகா ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 வாதிகள்
6. வரதராஜன்
7. நாராயணசாமி ... 6, 7 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 20.09.2024ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 6, 7

எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வசந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் வாதுரை கேட்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## <u>உத்தரவு</u>

அசல் வழக்கில் 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கு எண்.320/2022ல் 3, 4 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடவேண்டி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### <u>1. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:–</u>

1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவில் தாவாச்சொத்தில் பாலம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட மேல்புற 2 1/2 செண்ட் பாகத்தை அசல் வழக்கில் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் கோவிலுக்கு தானம் செய்ததை நன்கு அறிவார்கள் என்றும், ஊர் பொதுமக்கள் அனைவரும் வழிப்படும் அசல் வழக்கின் 1,2 பிரதிவாதிகளின் கோவிலுக்காக ரெங்கசாமி ரெட்டியாரின் விருப்பப்படி பாலம்மாள் தானம் செய்த தாவாச்சொத்து குறித்து அதில் உரிமை அற்ற எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தொடர்ந்துள்ள அசல் வழக்கு எண்.320/2022ல் தாவாச்சொத்தின் உரிமையை தீர்மானிக்கவும், உரிய

உத்தரவு பிறப்பிக்கவும் மேற்படி மனுதாரர்களை அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்ககோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2.1) 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி தரப்பு எதிருரையில் மனுதாரர்களுக்கு தாவாச்சொத்தில் எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லாத நிலையிலும், மனுதாரர்கள் தங்களை எதன் அடிப்படையில் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதற்கு எவ்வித தெளிவான விளக்கமும் விளக்கமும் குறிப்பிடவில்லை என்றும், மேலும் வழக்கிடைச்சொத்தில் மனுதாரர்கள் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றும், பாலம்மாளின் சான்றுதி ஆவணத்தில் மூலம் தாவா சொத்தில் மேல்புரம் 2 1/2 செண்ட் அசல் வழக்கில் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியமாகி அவர்கள் பரிபூரண அனுபவத்தில் இருந்து வருவதாக கூறுவது தவறு என்றும், சர்வே எண்.252/3A17ல் கட்டுப்பட்ட மொத்த 2,180 சதுரடி நிலமும் தங்கள் அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்றும், மனுதாரர்களின் கூற்றுப்படி தாவாச்சொத்தில் மேல்புரம் 2 1/2 செண்ட் நிலத்தை 1,2 பிரதிவாதிகள் நிர்வகிக்கும் கோவிலுக்கு தானமாக கொடுத்ததாக சொல்லி இருக்கிறார்கள் என்றும், அது உண்மையில்லை என்றும், மேற்படி பாலம்மாளுக்கு உரிமை இல்லாதபோது பாலம்மாளின் வாரிசுகள் என்று கூறும் மனுதாரர்களுக்கும் உரிமை இல்லை என்றும்,

2.2) இந்நிலையில் தாவாச்சொத்தில் உரிமையில்லாத மனுதாரர்களை அசல் வழக்கில் சேர்க்கவேண்டி மனுதாக்கல் செய்திருப்பது முறையற்றது என்றும், அசல் வழக்கினை காலம் கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேலும் 1,2 பிரதிவாதிகள்/6,7 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் இந்த எதிர்மனுதாரர்கள் அவசியமான தரப்பினர்கள் என்று குறிப்பிடவில்லை என்றும் எனவே 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகளின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

3.1) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவானது அசல் வழக்கில் 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகளை சேர்க்கவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) இருதரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனு நிலைக்கத்தக்கதா என்று பரிசீலிக்கையில், அசல் வழக்கானது விளம்புகை பரிகாரமும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகளால் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. வழக்குச்சொத்து ஆதியில் ரெங்கசாமி ரெட்டியார் அவரது மனைவி பாலம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர்களுக்கு நேரடியான வாரிசு இல்லை என்றும், எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த எதிருரையில் காணப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி பாலம்மாளின் உடன்பிறந்த சகோதரரான வெங்கிடசாமியின் மகனான 1ம் மனுதாரர் மற்றும் மற்றொரு சகோதரரரின் மகனான 2ம் மனுதாரருக்கும் 07.09.1994ல் அவரது சொத்துக்களை பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள நிலையிலும், மேற்படி பாலம்மாளின் உறவினர் மற்றும் வாரிசு என்ற முறையில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டும், இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை எவ்வகையிலும் மாறுதல் ஏற்படாது என்பதையும் கருத்தில்கொண்டும், மனுதாரர்களின் மனு மற்றும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில்கொண்டும், 1, 2 மனுதாரர்கள்/3, 4 உத்தேச பிரதிவாதிகளின் மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒம். E.மணிகண்டன்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு: –**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

(ஒம். E.மணிகண்டன்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.03/2023
அசல் வழக்கு எண்.320/2022
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 26.09.2024